Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349






# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

tamilmakkalkurall@gmail.com

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், செப்டம்பர் 10, 2026 | இதழ் 150





## தவெக தலைமையிலான கூட்டணிக்கு மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி என பெயர் அறிவிப்பு

சென்னை, 10 செப்டம்பர் 2026: தவெக தலைமையிலான கூட்டணிக்கு மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி என பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. தவெக தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ், விசிக, மதிமுக, ஐயுஎம்எல் கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

தவெக தலைமையிலான ஆட்சி அமைத்தது முதலே தங்கள் தலைமையில் ஒரு கூட்டணியைக் கட்டமைக்க தவெக முனைப்புக்காட்டி வருகிறது. அந்த கூட்டணிக் கட்டமைப்பின் முதல் முயற்சியாக கடந்த ஜூலை 1ம் தேதி, தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தந்த தோழமை கட்சிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், தவெக தலைமையில் ஒரு கூட்டணியைக் கட்டமைப்பதன் தொடக்கமாகவும் கோவளத்தில் தனியார் நட்சத்திர விடுதியில் தவெக தலைவர் விஜய் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆனால், அந்தக் கூட்டத்தில் இடது சாரிக் கட்சிகள் பங்கேற்கவில்லை. தவெக அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தெரிவிக்கிறோம். அதேநேரம் நாங்கள் கூட்டணியிலும் இல்லை; அமைச்சரவையிலும் இடம் பெறவில்லை என்று தெரிவித்தனர். அதேநேரம், விசிக, காங்கிரஸ் உள்ளிட்ட ஆதரவுக் கட்சிகள் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டன.

இந்நிலையில், தோழமைக் கட்சிகளுடனான 2ம் கட்ட ஆலோசனை கூட்டம் இன்று மாலை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்கும்படி இடதுசாரிகள், விசிக, மதிமுக, காங்கிரஸ், ஐயுஎம்எல் ஆகிய தோழமைக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து அமைச்சர்கள் அழைப்பு விடுத்தனர்.



ஆனால், முதல் கூட்டத்தில் பங்கேற்காத இடதுசாரி கட்சிகள், தவெக அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தெரிவிக்கிறோம். அதேநேரம் நாங்கள் கூட்டணியிலும் இல்லை என்று தெரிவித்ததைப் போன்றே இந்த முறையும் தெரிவித்து ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம் என தெரிவித்துள்ளனர். அதேநேரம், காங்கிரஸ், விசிக, மதிமுக, ஐயுஎம்எல் ஆகிய கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொண்டது.

இதையடுத்து தவெக தலைமையிலான கூட்டணிக்கு 'மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி' என பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் அளித்த பேட்டியில்; 'மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணி தமிழ்நாடு, புதுச்சேரியில் செயல்படும்; கூட்டணியின் தலைவராக விஜய் இருப்பார். புதிய கட்சிகளை கூட்டணியில் சேர்க்க முயற்சி எடுக்கப்படும்.

இந்தியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் என யாரையும் இதுவரை முன்னிறுத்தியது கிடையாது; கடந்த தேர்தலிலும் அப்படி யாரையும் அறிவிக்கவில்லை. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யார் பிரதமர் வேட்பாளர் என்பதை இந்தியா கூட்டணி முடிவு செய்யும்.

மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் இடைத்தேர்தல் வேட்பாளர்கள் நாளை அறிவிக்கப்படுவார்கள்; அவர்களின் வெற்றிக்காக பாடுபடுவோம்' என தெரிவித்தார்.

## சட்டப்பேரவை மதிப்பீட்டுக்குழு அறிவிப்பு; 14 பேர் கொண்ட பேரவை உரிமைக்குழு நியமனம்: சபாநாயகர் அறிவிப்பு

சென்னை 10, செப்டம்பர் 2026: தமிழக சட்டமன்றத்தில், உறுப்பினர்களின் உரிமைகள் மீறப்படுவது குறித்த புகார்களை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டமன்ற உரிமைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. 14 பேர் கொண்ட இந்த குழுவை சபாநாயகர் அறிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஆகஸ்ட் 4ம்தேதி தொடங்கியது. ஒரு மாத காலமாக நடந்த பேரவை கூட்டத் தொடர் நேற்றுடன் முடிவடைந்தது.

மேலும், சட்டப்பேரவை அவை குறிப்பில் இருந்து நீக்கப்பட்ட வார்த்தைகளை ரீல்ஸாக பதிவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், இது குறித்து நடவடிக்கை எடுக்கும் வகையில், சட்டப் பேரவையின் கடைசி நாளான நேற்று, சட்டமன்ற உரிமைக் குழுவை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்துள்ளார். 14 பேர் கொண்ட குழுவில், துணை சபாநாயகர் ரவிசங்கர் தலைவராகவும், 14 பேர் கொண்ட உறுப்பினர்களாக எம்எம்ஏக்கள் சிந்து, முகுந்தன்,



இளையராஜா, ரகுபதி, தியாகராஜன், செல்வம், ரேவந்த் சரண், ஜெகந்நாத் மிஸ்ரா, தளவாய் சுந்தரம், ஓ.எஸ். மணியன் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவை முன்னவர் செங்கோட்டையன் ஆகியோர் இருப்பார்கள்.

அதேபோன்று, சட்டமன்ற பொதுக் கணக்கு குழுவின் தலைவராக ஐ.யு.எம்.எல். சட்டமன்ற உறுப்பினர் சையத் பாரூக் பாஷா நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவைக்குழு தலைவராக பத்மநாபபுரம் தொகுதியின் மார்க்சிஸ்ட் எம்எல்ஏ. ஆர்.செல்லசாமி, நூலகக்குழுத் தலைவராக காட்டுமன்னார்கோவில் வி.சி.க சட்டமன்ற உறுப்பினர் ஜோதிமணி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## 22ம் தேதி குஜராத் நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்பு; தேசிய திரைப்பட விருது விழா; டெல்லிக்கு 'குட்பை': இனி மாநில நகரங்களிலும் நடத்த முக்கிய முடிவு

சென்னை, 10 செப்டம்பர் 2026: தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவானது இனி தலைநகர் டெல்லியைத் தவிர்த்து நாட்டின் பல்வேறு மாநில நகரங்களிலும் நடத்தப்படும் என்று ஒன்றிய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தியத் திரையுலகின் மிக உயரிய கவுரவமாகக் கருதப்படும் தேசிய திரைப்பட விருதுகள் கடந்த 1954ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் நாட்டின் தலைநகரான டெல்லியிலேயே பாரம்பரியமாக நடத்தப்பட்டு வந்த இந்த விழாவை, இனி நாட்டின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் முக்கிய நகரங்களில் நடத்த ஒன்றிய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் புதிய கொள்கை முடிவை எடுத்துள்ளது.

அதன்படி, 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற நோக்கத்தின் அடிப்படையில், 2024ம் ஆண்டிற்கான 72வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழா குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் வருகிற 22ம் தேதி பிரமாண்டமாக நடைபெற உள்ளது. இதில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்று சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்குகிறார். இந்த 72வது தேசிய விருதுகளில் 'ஆர்டிகிள் 370' சிறந்த திரைப்படமாகவும், 'பங்காரி' சிறந்த முழு நீளமற்ற படமாகவும், 'ராம்-நாமி' சிறந்த ஆவணப்படமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.



'பிரமயுகம்' படத்திற்காக மம்மூட்டி மற்றும் 'சந்து சாம்பியன்' படத்திற்காக கார்த்திக் ஆர்யன் ஆகியோருக்குச் சிறந்த நடிகருக்கான விருது பகிர்ந்தளிக்கப்படுகிறது. 'ஆர்டிகிள் 370' படத்தில் நடித்த யாமி கவுதமுக்கு சிறந்த நடிகை விருதும், 'சுவாதந்திரிய வீர் சாவர்க்கர்' படத்தை இயக்கிய ரந்தீப் ஹூடாவுக்கு சிறந்த அறிமுக இயக்குநர் விருதும் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும் அமரன், கல்கி 2898 ஏடி, புஷ்பா 2, ஸ்ரீ 2 உள்ளிட்ட திரைப்படங்களும் பல்வேறு பிரிவுகளில் விருதுகளை வென்றுள்ள நிலையில், முதன்முறையாக சந்தாலி மொழி படத்திற்கும் கவுரவம் கிடைத்துள்ளது.

## சட்டசபை தேர்தல் செலவு கணக்குகள் தாக்கல்; தமிழ்நாடு, புதுச்சேரியில் ரூ.63.5 கோடி வாரி இறைத்த பாஜக: தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் தகவல்

சென்னை 10, செப்டம்பர் 2026: தமிழ்நாடு, அசாம் மற்றும் புதுச்சேரி சட்டசபை தேர்தல்களில் பாஜக மொத்தம் 160 கோடி ரூபாய் செலவு செய்துள்ளதாக தேர்தல் ஆணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக சட்டசபை தேர்தல்களின் போது அரசியல் கட்சிகள் மேற்கொண்ட செலவு கணக்குகளை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிப்பது வழக்கமான நடைமுறையாகும். அந்த வகையில் தமிழ்நாடு, அசாம், கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் புதுச்சேரி ஆகிய 5 மாநில சட்டசபை தேர்தல்களின் போது, பாஜகவின் அகில இந்திய தலைமை அலுவலகத்திற்கு மொத்தம் 1,472.8 கோடி ரூபாய் நிதி வந்துள்ளது. 2026ம் ஆண்டு மார்ச் 15ம் தேதியன்று 6,722.6 கோடி ரூபாயாக இருந்த கட்சியின் மொத்த கையிருப்பு நிதி, தேர்தல் நிறைவடைந்த மே 6ம் தேதியன்று 7,627.2 கோடி ரூபாயாக கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதில் மேற்குவங்கம் மற்றும் கேரளா மாநிலங்களின் தேர்தல் செலவு கணக்கு விவரங்களை தேர்தல் ஆணையம் இன்னும் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை.




பாஜக தலைமை அலுவலகம், மாநில மற்றும் மாவட்ட பிரிவுகள் இணைந்து அசாம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி தேர்தல்களில் மொத்தம் 160 கோடி ரூபாய் செலவு செய்துள்ளன. இதில் அதிகபட்சமாக அசாம் மாநிலத்தில் 96.3 கோடி ரூபாயும், தமிழ்நாட்டில் 51.6 கோடி ரூபாயும், புதுச்சேரியில் 11.9 கோடி ரூபாயும் (மொத்தம் ரூ.63.5 கோடி) செலவிடப்பட்டுள்ளது. பொதுவான கட்சி தேர்தல் பிரசார பணிகளுக்காக 130.4 கோடி ரூபாயும், வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த தொகை மற்றும் அவர்களின் குற்றப்பின்னணி விளம்பரங்களுக்காக 29.6 கோடி ரூபாயும் பயன்படுத்தப்பட்டு உள்ளது. அசாமில் நட்சத்திர பேச்சாளர்களின் பயணத்திற்காக மட்டும் 27.3 கோடி ரூபாயும், விளம்பரங்களுக்கு 37 கோடி ரூபாயும், தேர்தல் விளம்பரப் பொருட்களுக்கு 8.9 கோடி ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.

அசாம் மாநில வேட்பாளர்களுக்கு மொத்தமாக 19.4 கோடி ரூபாயும், அவர்களது குற்றப் பின்னணியை ஊடகங்களில் விளம்பரப்படுத்த 16.7 லட்சம் ரூபாயும் செலவிடப்பட்டதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. அதேபோல தமிழகத்தில் பொதுவான தேர்தல் பிரசார பணிகளுக்கு 44.5 கோடி ரூபாயும், வேட்பாளர்களுக்காக 7 கோடி ரூபாயும் செலவழிக்க பாஜக அனுமதி வழங்கியது. இதற்கிடையே, இதே மாநிலங்களின் தேர்தல் களத்தில் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி மொத்தம் 248.6 கோடி ரூபாய் செலவு செய்துள்ளதாக முன்னதாக தனது தேர்தல் செலவு கணக்கு அறிக்கையில் அதிகாரப்பூர்வமாக தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
செப்டம்பர் 10, 2026

## மிரே அஸெட் எம்எஃப் இந்தியாவின் முதல் ஹைப்ரிட் இடிஎஃப் மற்றும் முதல் ஸ்மார்ட் பீட்டா அடிப்படையிலான ஹைப்ரிட் குறியீட்டு நிதியை அறிமுகப்படுத்துகிறது

சென்னை 10, செப்டம்பர் 2026: மிரே அஸெட் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட். இரண்டு புதிய நிதி சலுகைகளை (என்எஃப்ஓ) இந்தியாவின் முதல் ஹைப்ரிட் . மிரே அஸெட் நிஃப்டி 200 மொமெண்டம் 30 Plus 8-13 yr G-Sec 50:50 ETF (ஒரு திறந்த பரிமாற்ற வர்த்தக நிதி பிரதி/கண்காணிப்பு மிரா சொத்து நிஃப்டி 200 மொமெண்டம் 30 Plus 8-13 yr G-Sec 50:50 டோட்டல் ரிட்டர்ன் இண்டெக்ஸ்) இது ஒரு ஸ்மார்ட் பீட்டா சீரான கலப்பின இடிஎஃப் மற்றும் இந்தியாவின் முதல் ஸ்மார்ட் பீட்டா ஹைப்ரிட் குறியீட்டு நிதி i.e. மிரே அஸெட் நிஃப்டி 200 மொமெண்டம் இது ஒரு ஈக்விட்டி சார்ந்த ஹைப்ரிட் இன்டெக்ஸ் ஃபண்ட் ஆகும்.

இரண்டு நிதிகளும் ஒரே பங்கு மற்றும் கடனை அடிப்படையாகக் கொண்டவை. ஹைப்ரிட் ஈடிஎஃப் ஈக்விட்டி மற்றும் கடனில் சமமாக முதலீடு செய்வதன் மூலம் சமநிலையான ஒதுக்கீட்டை இலக்காகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் ஹைப்ரிட் குறியீட்டு நிதி 75% ஈக்விட்டியில் முதலீடு செய்வதன் மூலமும் கடனில் இருப்பதன் மூலமும் ஆக்கிரமிப்பு ஒதுக்கீட்டை இலக்காகக் கொண்டுள்ளது. ஈக்விட்டி கூறு நிஃப்டி 200 மொமெண்டம் 30 குறியீட்டைப் பிரதிபலிக்கும், இது ஒரு ஸ்மார்ட் பீட்டா ஈக்விட்டி மூலோபாயம், இது சமீபத்தில் ஒப்பீட்டளவில் சிறந்த இடர் சரிசெய்யப்பட்ட வருவாயை வழங்கிய பங்குகளைக் கைப்பற்றுவதன் மூலம் வருவாயை உருவாக்க முற்படுகிறது. கடன் கூறு நிஃப்டி 8-13 ஆண்டு ஜி-செக் குறியீட்டை அடிப்படையாகக் கொண்டது, இது அதிக காலத்தைக் கொண்டிருந்தாலும், எந்தவொரு கடன் அபாயமும் இல்லாமல் இழப்பீட்டு பாதுகாப்பை வழங்க முற்படுகிறது. இரண்டு நிதிகளுக்கும் என்எஃப்ஓ ஜூலை 10,2026 அன்று சந்தாவுக்குத் திறக்கப்பட்டு ஜூலை 22,2026 அன்று முடிவடையும். ஈடிஎஃப் ஜூலை 28,2026 அன்று மீண்டும் திறக்கப்படுகிறது, அதே நேரத்தில் குறியீட்டு நிதி ஜூலை 29,2026 அன்று மீண்டும் திறக்கப்படுகிறது.

"ஈக்விட்டி மற்றும் கடன் ஆகியவற்றின் கலவையானது ஸ்திரத்தன்மையுடன் வளர்ச்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மொமெண்டம் ஈக்விட்டி கூறாக இருப்பதால், இந்த ஹைப்ரிட் ஃபண்டுகள் ஈக்விட்டி சந்தையை தலைகீழாக ஆக்கிரமிக்க முற்படுகின்றன, அதே நேரத்தில் கடன் கூறு ஆபத்து மற்றும் அதிக நிலையற்ற தன்மையைக் குறைக்க முயல்கிறது "என்று மிரே அஸெட் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஈடிஎஃப் தயாரிப்பு மற்றும் நிதி மேலாளர் சித்தார்த் ஸ்ரீவஸ்தவா கூறினார். "இரண்டு நிதிகளும் பங்கு மற்றும் கடனுக்கான வெவ்வேறு அளவிலான வெளிப்பாட்டைக் கொண்டுள்ளன, ஈடிஎஃப் சமநிலையான அணுகுமுறையை இலக்காகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் குறியீட்டு நிதி ஆக்ரோஷமான கலப்பின அணுகுமுறையை இலக்காகக் கொண்டுள்ளது. முதலீட்டாளர்கள் தங்கள் இடர் சுயவிவரத் திற்கு ஏற்ற கலப்பின நிதியை சிறந்த முறையில் தேர்வு செய்யலாம்".

பங்கு மற்றும் கடன் கூறுகளின் எடை மாதாந்திர அடிப்படையில் மீட்டமைக்கப்படும், அதே நேரத்தில் அடிப்படை பங்கு குறியீட்டு போர்ட்ஃபோலியோ அரை ஆண்டு அடிப்படையில் மறுசீரமைக்கப்படும். அடிப்படை குறியீடுகள் பங்கு மற்றும் கடன் தேர்வு, எடை மற்றும் மறுசமநிலைப்படுத்தல் ஆகியவற்றிற்கான வரையறுக்கப்பட்ட முறையைப் பின்பற்றுவதால், ஒதுக்கீடு விளைவுகள் விருப்பப்படி நிர்வகிக்கப்படும் கலப்பின நிதிகளை விட மிகவும் கணிக்கக்கூடியதாக இருக்கலாம்.

ஹைப்ரிட் ஈடிஎஃப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுவதால், ஒரு வருடத்திற்கும் மேலாக வைத்திருக்கும் அலகுகள் நீண்ட கால மூலதன ஆதாய வரி சிகிச்சைக்கு தகுதி பெறலாம், இது நடைமுறையில் உள்ள வரிச் சட்டங்களுக்கு உட்பட்டது.

கூடுதலாக, முதலீட்டாளர்கள் சந்தை நேரங்களில் நிகழ்நேர, இன்ட்ராடே விலையில் அலகுகளை வாங்கவும் விற்கவும் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருப்பார்கள்.

என். எஃப். ஓ-வின் போது குறைந்தபட்ச ஆரம்ப முதலீடு ரூ. 5,000/- (ரூபாய் ஐயாயிரம்) ஆகவும், அடுத்தடுத்த முதலீடுகள் ரூ. 1 க்கு பிறகு.

இடிஎஃப் மற்றும் குறியீட்டு நிதியை திருமதி ஏக்தா காலா மற்றும் திருமதி பிரணவி குல்கர்னி நிர்வகிப்பார்கள்.

## வர்த்தகப் போர் தீவிரம்.. கனடா பொருட்களுக்கு அமெரிக்கா தடை; அதிபர் டிரம்ப் அதிரடி



சென்னை 10, செப்டம்பர் 2026: அமெரிக்கா - கனடா இடையே வர்த்தகப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், கனடாவிலிருந்து பால் பொருட்கள், சில மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பெரும்பாலான மதுபானங்களை இறக்குமதி செய்ய அமெரிக்கா தடை விதித்துள்ளது.

அமெரிக்க அதிபரான டிரம்ப் இதற்கான நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளார். இந்த இறக்குமதி தடை கள் வரும் செப்டம்பர் 29, 2026 முதல் அமலுக்கு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. முன்னதாக, இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகள் முறிந்ததைத் தொடர்ந்து அமெரிக்கா விதித்த வரிகளுக்குப் பதிலடியாக, 20 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள அமெரிக்கப் பொருட்கள் மீது கனடா புதிய வரிகளை விதித்தது. இந்த புதிய வரிகள் அமலுக்கு வந்த சில மணி நேரங்களிலேயே அமெரிக்கா மேற்கண்ட தடை அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. கனடாவின் பால் பொருட்களான வே புரோட்டீன், மோலாசஸ், பெரும்பாலான மதுபானங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் /மோபெட் வாகனங்கள் அமெரிக்காவின் சமீபத்திய இந்தத் தடையில் அடங்கும். மேலும், சில பிரபலமான கனேடிய சீஸ் வகைகளுக்கு 50 சதவீத கூடுதல் வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

## மூன்று புதிய ப்ளூ ஸ்கொயர் டீலர்ஷிப்கள் மூலம் சென்னையில் தனது இருப்பை வலுப்படுத்தும் யமஹா




சென்னை, 10 செப்டம்பர் 2026: இந்தியா யமஹா மோட்டார்ஸ் (ஐஒய் எம்) நிறுவனம் சென்னையில் மூன்று புதிய ப்ளூ ஸ்கொயர் டீலர்ஷிப்களைத் திறப்பதாக அறிவித்துள்ளது: ஏவிஜ மோட்டார்ஸ் - ரெட்ஹில்ஸ், வால்டர்ஸ் மோட்டோஹப் - பழைய வண்ணாரப்பேட்டை, மற்றும் எஸ் கேஒய் மோட்டார்ஸ் - துரைப்பாக்கம், ஓஎம் ஆர். இந்த விரிவாக்கம், வாடிக்கையாளர்களின் அணுகலை மேம்படுத்துவதற்கும், இந்தியாவின் மிக முக்கியமான இருசக்கர வாகனச் சந்தைகளில் ஒன்றில் தனது இருப்பை வலுப்படுத்துவதற்கும் யமஹா கொண்டுள்ள அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது.

நகரத்தின் முக்கியப் பகுதிகளில் சிறப்பான முறையில் அமைந்துள்ள இந்த புதிய டீலர்ஷிப்கள், ப்ளூ ஸ்கொயர் ரீடெய்ல் கான்செப்டின்கீழ் யமஹா-வின் பிரீமியம் ரக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களுடன், அதற்கான பிரத்யேக சர்வீஸ் மற்றும் ஸ்பேர்ஸ் வசதிகளையும் வழங்குகின்றன. இந்த விரிவாக்கம் சென்னையில் யமஹா-வின் விற்பனைக்குப் பிந்தைய நெட்வொர்க்கிற்கு ஒரு பெரிய பலமாக அமைகிறது. இந்த மூன்று டீலர்ஷிப்களிலும் மேம்படுத்தப்பட்ட சர்வீஸ் உள்கட்டமைப்பு வசதி இருப்பதால், வாடிக்கையாளர்கள் தங்களது வாகனப் பயன்பாட்டுக் காலம் முழுவதும் வேகமான, மிகவும் சௌகரியமான மற்றும் நம்பகமான சர்வீஸ் ஆதரவைப் பெற முடியும். இந்த மூன்று புதிய டீலர்ஷிப்களின் திறப்புடன், யமஹா இப்போது சென்னை மண்டலத்தில் 28 பிரீமியம் ப்ளூ ஸ்கொயர் ஷோரூம்களைக் கொண்டுள்ளதுடன், தனது மொத்த நெட்வொர்க் எண்ணிக்கையை 37 டச்பாயிண்டுகளாக உயர்த்தியுள்ளது.

வலுவான ரைடிங் கலாச்சாரம் மற்றும் பிரீமியம் இருசக்கர வாகனங்களுக்கான அதிகரித்து வரும் தேவையின் ஆதரவோடு, சென்னையும் முழு தமிழ்நாடும் யமஹா-விற்கு தொடர்ந்து ஒரு முக்கியச் சந்தையாக விளங்கி வருகின்றன. பல ஆண்டுகளாக இந்தப் பிராந்தியத்தில் யமஹா சீரான வளர்ச்சியைக் கண்டுள்ளது, மேலும் இந்த மூன்று டீலர்ஷிப்களின் திறப்பானது எதிர்கால வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும், வாடிக்கையாளர்களின் அணுகலை மேம்படுத்தவும், சந்தை முழுவதும் ஒரு சிறந்த வாகன உரிமையாளர் அனுபவத்தை வழங்கவும் அதன் நெட்வொர்க்கை வலுப்படுத்துவதற்கான மற்றொரு முக்கியமான படியாகும்.

யமஹா-வின் உலகளாவிய ரேசிங் பாரம்பரியம் மற்றும் பிரீமியம் பிராண்ட் மதிப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ப்ளூ ஸ்கொயர் நெட்வொர்க், வாடிக்கையாளர்கள் மற்றும் ரைடிங் ஆர்வலர்களுடன் ஆழமான தொடர்பை ஏற்படுத்துவதற்கான ஒரு தளமாகத் தொடர்ந்து செயல்படுகிறது.

சென்னையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த விரிவாக்கத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள வாடிக்கை யாளர்களுடனான தனது உறவை வலுப்படுத்துவதோடு, சிறப்பான சர்வீஸ், சௌகரியம் மற்றும் உலகத்தரம் வாய்ந்த வாடிக்கையாளர் அனுபவங்களை வழங்கவும் யமஹா இலக்கு கொண்டு உள்ளது.

## இலங்கையுடனான இந்தியாவின் உறவு இதயத்துக்கும் ஆன்மாவுக்குமான உறவை போன்றது .! ராஜ்நாத் சிங்



சென்னை 10, செப்டம்பர் 2026: ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இலங்கை சென்றுள்ளார். அந்நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்தியா மற்றும் இலங்கை ஆகியவை பகிரப்பட்ட வரலாற்று மற்றும் நாகரிகப் பாரம்பரியத்தின் மூலம் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பெருங்கடல் என்பது வெறும் நீர்வழிப்பாதை மட்டுமல்ல; அது நமது பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் மூலோபாய எதிர்காலம் தீர்மானிக்கப்படவுள்ள ஒரு முக்கிய களமாகும். இந்தியப் பெருங்கடலால் இணைக்கப்பட்டுள்ள கடல்சார் நாடுகளான இந்தியா மற்றும் இலங்கையைப் பொறுத்தவரை, இது வெறும் கோட்பாடு சார்ந்த விஷயம் அல்ல; மாறாக, நமது வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்தை வடிவமைக்கும் அன்றாட யதார்த்தம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் ஒருபோதும் இரு நாடுகளுக்கு எவ்வகையிலும் தடையாக இருந்ததில்லை; மாறாக, நமது மக்களுக்கு இடையே நெருக்கமான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகளை வளர்ப்பதில் அது ஒரு ஊக்கியாகவே இருந்து வருகிறது. வேகமாக மாறிவரும் புவிசார் அரசியல் சூழலில், இந்தியப் பெருங்கடல் தற்காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பிடித்துள்ளது. வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் மற்றும் ஜனநாயக நாடுகள் என்ற வகையில், நாம் ஒரு கூட்டு எதிர்காலத்தைக் கொண்டுள்ளோம் என்று இலங்கையை குறிப்பிட்டு பேசினார்.

அதே நேரம் பாரம்பரிய அணுகுமுறைகளைத் தாண்டி, ஏற்கனவே உள்ள பரஸ்பர ஒத்துழைப்பு வாய்ப்புகளை வலுப்படுத்துவதோடு, இன்னும் நெருக்கமான மற்றும் வலிமையான கடல்சார் கூட்டாண்மைக்கான புதிய வழிமுறைகளை நாம் உருவாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். கடினமான காலங்களில் இலங்கையுடன் தோளோடு தோள் நின்று இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துள்ள ராஜ்நாத் சிங், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு இதயத்துக்கும் ஆன்மாவுக்குமான உறவைப் போன்றது என குறிப்பிட்டு உள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## அஜீதேஷ் சந்து மற்றும் ஸ்டெபான் டானெக் முதல் சுற்றில் தலா 65 அடித்து, சிபிசிஎல் வழங்கும் சென்னை ஓப்பன் 2026 போட்டியில் கூட்டுத் முன்னிலை பெற்றனர்

சென்னை 10, செப்டம்பர் 2026: சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (சிபிசிஎல்) வழங்கும், ஐஎன்ஆர் 1 கோடி பரிசுத்தொகை கொண்ட சென்னை ஓப்பன் 2026 போட்டியின் முதல் சுற்றில், அஜீதேஷ் சந்து மற்றும் ஸ்டெபன் டானெக் தலா ஏழு-அண்டர் 65 ஸ்கோரைப் பதிவு செய்து, ஒரு ஷாட் முன்னிலையில் கூட்டுத் தலைமை பெற்றனர். இந்தப் போட்டி டிஎன்ஜிஎஃப் காஸ்மோ கோல்ஃப் கோர்ஸ்-ல் நடைபெற்றது.

சண்டிகரைச் சேர்ந்த 37 வயதான சந்து, முன்னாள் ஏசியன் டூர் வெற்றியாளர் ஆவார். அவர் 12வது பார-4 குழியில் ஒரு போகியை மட்டும் பதிவு செய்து, எட்டு பேர்டிகளை அடித்து சிறப்பாக விளையாடினார்.




செக் குடியரசைச் சேர்ந்த 29 வயதான டானெக், ஏழு பேர்டிகளுடன் எந்தவித போகியும் இல்லாத சிறப்பான சுற்றை நிறைவு செய்து, சந்து உடன் முதலிடத்தைப் பகிர்ந்துகொண்டார். தற்போது அவர் டிபி வேர்ல்டு பிஜிடிஐ-யில் தனது மூன்றாவது சீசனில் விளையாடி வருகிறார்.

சண்டிகரைச் சேர்ந்த ஜெய்ராஜ் சிங் சந்து, போகி ஏதுமின்றி ஆறு-அண்டர் 66 ஸ்கோரைப் பதிவு செய்து, டெல்லியைச் சேர்ந்த ரஷீத் கான் மற்றும் பவன் வர்மா ஆகியோருடன் மூன்றாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டார். 35 வயதான ரஷீத், இரண்டு வாரங்களுக்கு முன்பு விகாராபாத்தில் நடைபெற்ற தெலங்கானா ஓப்பன் போட்டியில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து சென்னை வந்துள்ளார்.

டிபி வேர்ல்டு பிஜிடிஐ-யில் ஐந்து முறை வெற்றி பெற்ற அஜீதீஷ், தனது சுற்றின் தொடக்கத்திலும் இறுதியிலும் கிடைத்த ஸ்கோரிங் வாய்ப்புகளை சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்.

16வது மற்றும் 18வது குழிகளில் இரண்டிலும் கிரீன்சைடு பங்கரில் சிக்கியிருந்தபோதிலும், அவ்விரு குழிகளிலும் பேர்டிகளைப் பதிவு செய்து தனது சுற்றை சிறப்பாக நிறைவு செய்தார்.

## ட்ரம்ப் - புடின் தொலைபேசியில் பேச்சு: உக்ரைன் போர் குறித்து முக்கிய ஆலோசனை!

சென்னை 10, செப்டம்பர் 2026: அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும் செப்டம்பர் 8ஆம் தேதி சுமார் ஒரு மணி நேரம் தொலைபேசியில் உரையாடினர். இந்த உரையாடலின்போது உக்ரைன் போர், அமெரிக்கா - ரஷ்யா உறவு, வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் போர் கைதிகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உரையாடலுக்கு சில நாட்களுக்கு முன்பு, அமெரிக்காவின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோர் மாஸ்கோ மற்றும் கீவ் நகரங்களுக்குச் சென்றிருந்தனர். உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கும் முயற்சியாகவே இந்தப் பயணம் அமைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் உடனடி முன்னேற்றம் கூறப்படவில்லை என்றாலும், பேச்சுவார்த்தைகள் சாதகமான சூழலில் நடைபெற்றதாக ட்ரம்பும் புடினும் கருதியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து ஐரோப்பிய நாடுகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உக்ரைன் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே தனது விருப்பம் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.




மேலும், தனது அதிபர் பதவிக் காலத்திலேயே போருக்கு தீர்வு காண அவர் விரும்புவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர் முடிவுக்கு வந்தால், அமெரிக்கா - ரஷ்யா இடையிலான உறவை மேம்படுத்துவதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை மீண்டும் வலுப்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசித்ததாகக் கூறப்படுகிறது. எனினும், வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இதுவரை எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. இதற்கிடையே, ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் கைதிகள் பரிமாற்றத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இரு தலைவர்களும் ஆதரவு தெரிவித்ததாகத் தெரிகிறது. மேலும், ரஷ்யா - உக்ரைன் - அமெரிக்கா இடையிலான அடுத்த முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கான தேதி இன்னும் உறுதி செய்யப்படவில்லை. துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம் அல்லது சுவிட்சர்லாந்தில் அடுத்த சந்திப்பு நடைபெற வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## ஐஐசிஐ 2026-இல் ஐஸ்கிரீம் உற்பத்திக்கான முழுமையான தீர்வுகளை டெட்ரா பாக் காட்சிப்படுத்துகிறது

சென்னை 10, செப்டம்பர் 2026: உணவு பதப்படுத்துதல் மற்றும் பேக்கேஜிங் தீர்வுகளை வழங்கும் உலகின் முன்னணி நிறுவனமான டெட்ரா பாக், சென்னையில் 2026 செப்டம்பர் 10 முதல் 12 வரை நடைபெறவுள்ள ‘இந்திய ஐஸ்கிரீம் காங்கிரஸ் மற்றும் கண்காட்சி ஐஐசிஐ 2026’-இல் ஐஸ்கிரீம் தயாரிப்புக்கான தனது முழுமையான செயல்முறைத் திறன்களைக் காட்சிப்படுத்துகிறது.

“செலவுகள் மற்றும் முயற்சியைக் குறைத்து எளிதான வளர்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது,” என்ற கருப்பொருளில், டெட்ரா பாக், இன்றைய புதிய தலைமுறை மற்றும் நன்கு நிலைபெற்ற ஐஸ்கிரீம் உற்பத்தியாளர்களின் மிக முக்கியமான சில முன்னுரிமைகளை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட தீர்வுகளைக் காட்சிப்படுத்தும்: தயாரிப்புத் தரத்தைப் பராமரித்து, முதலீட்டின் மீதான சிறந்த வருவாயை உறுதி செய்யும். அதே வேளையில், கூடுதல் உற்பத்திக் கட்டுப்பாட்டை அதிகப்படுத்தி, உற்பத்தித் திறனை மேம்படுத்தி மற்றும் வெளியீட்டை அதிகப்படுத்தும். இந்த அரங்கு, யோசனை மற்றும் தயாரிப்பு மேம்பாட்டிலிருந்து தொடங்கி, உற்பத்திச் சிறப்பு மற்றும் வணிக வளர்ச்சி வரையிலான முழுமையான ஐஸ்கிரீம் பயணத்தை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

டெட்ரா பேக்கின் செயலாக்க இயக்குநர் பர்மோத் கந்த்வால் கூறியதாவது, “ஒரு ஐஸ்கிரீம் உற்பத்தியாளரைப் பொறுத்தவரை, வளர்ச்சி என்பது இறுதியில் பல விஷயங்களைச் சரியாகச் செய்வது; நுகர்வோர் விரும்பும் தயாரிப்புகளை உருவாக்குவது; சரியான விளைச்சலை அடைவது; நிலைத்தன்மையைப் பராமரிப்பது மற்றும் லாபகரமாக விரிவாக்கக்கூடிய செயல்பாடுகளைக் கட்டமைப்பது ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்த ஆண்டு ஐஐசிஐ நிகழ்வில், டெட்ரா பேக் இந்த அம்சங்களை எவ்வாறு ஒன்றிணைக்கிறது என்பதை நாங்கள் நிரூபிக்கிறோம். எங்கள் தயாரிப்புத் தொகுப்பை, தயாரிப்பு மேம்பாட்டு நிபுணத்துவத்தை, உலகளாவிய புத்தாக்கங்கள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தீர்வுகள் உள்ளிட்ட மேம்பட்ட செயலாக்கத் தொழில்நுட்பங்களுடன் இணைக்கிறது. இது, வணிக நிறுவனங்களுக்கு அவற்றின் முதல் உருவாக்கம் முதல் அதிக உற்பத்தித் திறன் வரை ஆதரவளிக்க எங்களுக்கு



உதவுகிறது. ‘செலவுகள் மற்றும் முயற்சியைக் குறைத்து எளிதான வளர்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது’ என்ற இந்த நிகழ்வின் கருப்பொருள், அந்த லட்சியத்தையே துல்லியமாகப் பிரதிபலிக்கிறது: அதாவது, எங்கள் வாடிக்கையாளர்களின் தயாரிப்பு வாய்ப்புகளை வலிமையான, அதிக செயல்திறன் மிக்க மற்றும் விரிவாக்கக்கூடிய வணிகங்களாக மாற்ற உதவுவதே ஆகும்.”

யோசனையிலிருந்து சந்தைக்குத் தயாரான தயாரிப்பு வரை

ஐஐசிஐ கண்காட்சியில், டெட்ரா பாக் தனது தயாரிப்பு மேம்பாட்டு மையத்தின் திறன்களைக் காட்சிப்படுத்தும். கருத்துரு உருவாக்கம் மற்றும் சூத்திர மேம்பாட்டிலிருந்து சோதனைகள் மற்றும் சந்தைக்குத் தயாரான தயாரிப்புகள் வரை அது வாடிக்கையாளர்களுக்கு எவ்வாறு ஆதரவளிக்கிறது என்பதை விளக்கிக் காட்டும். பார்வையாளர்கள், சூத்திர மேம்பாட்டு சோதனையால் உருவாக்கப்பட்ட சூத்திரங்கள் மற்றும் தயாரிப்புக் கருத்துருக்கள், சந்தை மாதிரிகள், நுகர்வோர் மற்றும் பிரிவு சார்ந்த நுண்ணறிவுகள், மற்றும் பல்வேறு ஐஸ்கிரீம் வடிவங்கள் மற்றும் தன்மைகளில் உள்ள சாத்தியக்கூறுகளைக் கண்டறிய முடியும்.

நம்பகமான, நெகிழ்வான மற்றும் அதிகத் திறன் கொண்ட உற்பத்தி

இந்தக் கண்காட்சியின் மையத்தில், ஃபில்லர், ஸ்டிக் இன்செர்ட்டர் மற்றும் பேக் சக்ஷன் சிஸ்டம்களைக் கொண்ட டெட்ரா பாக் டி ரோட்டரி மோல்டர் 27 ஏ4 முழுமையான தயாரிப்பு வரிசை இடம்பெறும். நம்பகமான, நெகிழ்வான மற்றும் அதிகத் திறன் கொண்ட உற்பத்திக்காக வடிவமைக்கப்பட்ட இந்தத் தீர்வு, வளர்ந்து வரும் ஐஸ்கிரீம் வணிகங்கள், தயாரிப்பின் நிலைத்தன்மையையும் செயல்பாட்டுத் திறனையும் பராமரிக்கும் அதே வேளையில், உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது.

## அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான காலாண்டுத் தேர்வு அட்டவணை வெளியீடு!

சென்னை 10, செப்டம்பர் 2026: அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கான காலாண்டு தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. செப்டம்பர் 16ம் தேதி தொடங்கும் பள்ளி காலாண்டு தேர்வுகள் 24ஆம் தேதி முடிவடைகின்றன. தேர்வுக்குப் பிறகு செப்டம்பர் 25ம் தேதி முதல் அக்.4 வரை காலாண்டு விடுமுறை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர்களுக்கான 2026-2027 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் மாணவர்களுக்கான காலாண்டுத் தேர்வு அட்டவணை வெளியாகி உள்ளது. காலாண்டுத் தேர்வு 16 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளியான அறிக்கையில்; "அரசு, அரசு உதவிபெறும், தனியார் பள்ளிகளில் படிக்கும் 1 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு காலாண்டுத் தேர்வு நடைபெறுவதற்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்களுக்கு செப்டம்பர் 16 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரையில் குறிப்பிட்ட நாட்களில் அந்தப் பாடத்திற்கு தேர்வினை நடத்த வேண்டும்.

9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மதியம் 2 மணி முதல் 4.30 மணி வரையிலும், 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரையிலும் தேர்வு நடைபெறும். மேலும் செப்டம்பர் 16 - தமிழ், செப். 17 - ஆங்கிலம், செப். 18 - விருப்பப் பாடம், செப். 21 - கணக்கு, செப். 22 - உடற்கல்வி, செப். 23 - அறிவியல், செப்.24 - சமூக அறிவியல் தேர்வுகள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'ஐகான் ஸ்டார்' அல்லு அர்ஜுன் ரசிகர்கள் இந்தியா முழுவதும் 3 லட்சம் மாணவிகளிடம் ஹெச்பிவி விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளனர்!

சென்னை 10, செப்டம்பர் 2026: சினிமா மற்றும் கொண்டாட்டங்களைத் தாண்டி ரசிகர்கள் இயக்கத்தை சமூக நலனுக்கான முயற்சியாக மாற்றும் வகையில், 'ஐகான் ஸ்டார்' அல்லு அர்ஜுன் "சிகர்கள் 8 மாநிலங்களில் இணைந்து 820 ஹெச்பிவி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். இதன் மூலம் இந்தியா முழுவதும் சுமார் 3 லட்சம் மாணவிகளிடம் ஹெச்பிவி குறித்த விழிப்புணர்வு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அல்லு அர்ஜுன் ஃபேன்ஸ் அசோசியேஷன்(ஏஏஎஃப்ஏ) சார்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த முயற்சி ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, ஒடிசா, தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் என 8 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் பள்ளிகள் மற்றும் சமூகத்திற்கு நேரடியாக ஹெச்பிவி குறித்த விழிப்புணர்வு கொண்டு செல்லப்பட்டது.



இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம், இளம் மாணவிகளுக்கு ஹெச்பிவி வைரஸ், அதனைத் தடுக்கும் வழிமுறைகள் மற்றும் பிறிகூஷி தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மாணவிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தகுதியான சுகாதார நிபுணர்களிடம் உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெறவும் ஊக்குவிக்கப்பட்டனர்.

ரசிகர் மன்ற செயல்பாடுகள் சினிமா கொண்டாட்டங்கள் மற்றும் திரைப்பட நிகழ்ச்சிகள் என ஒரு வட்டத்திற்குள் சிக்காமல் பல்வேறு மாநிலங்களில் உள்ள தங்களது விரிவான ரசிகர்கள் வலையமைப்பை பயன்படுத்தி, முக்கியமான சுகாதார விழிப்புணர்வு செய்தியை நேரடியாக பள்ளிகளுக்கு கொண்டு சென்றுள்ளனர் ஏஏஎஃப்ஏ உறுப்பினர்கள். 820 நிகழ்ச்சிகளை 8 மாநிலங்களில் நடத்தியிருப்பதன் மூலம் சுமார் 3 லட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கைகள் இந்த முயற்சியின் மிகப்பெரிய அளவை மட்டுமல்லாமல், நாடு முழுவதும் உள்ள ரசிகர்களால் ஒரே நோக்கத்திற்காக ஒன்றிணைந்து செயல்பட முடியும் என்பதையும் வெளிப்படுத்துகின்றன. இந்த இயக்கம், சினிமாவைத் தாண்டிய அல்லு அர்ஜுனின் நாடு தழுவிய ரசிகர் தொடர்பின் மற்றொரு பரிமாணத்தையும் வெளிப்படுத்துகிறது. அவரது ரசிகர்கள், தங்களது கூட்டு பலத்தை சினிமாவுக்கு அப்பாற்பட்ட அர்த்தமுள்ள சமூக நல முயற்சிகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

தங்களது ரசிகர் பலத்தைப் பயன்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவது, ஹெச்பிவி குறித்து உரையாடல்களை உருவாக்குவது மற்றும் ஹெச்பிவி தடுப்பு மற்றும் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை அதிகமான குடும்பங்கள் புரிந்துகொள்ள உதவுவதே இந்த முயற்சியின் நோக்கம். ஒரு நட்சத்திரத்தைக் கொண்டாடுவதில் தொடங்கி, சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலைக்கு நடிகர் அல்லு அர்ஜுனின் ரசிகர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

## சிபிசிஎல் வழங்கும் சென்னை ஓபன் 2026 போட்டியில் அஜிதேஷ் சந்து இரண்டு ஷாட் முன்னிலை

சென்னை 10, செப்டம்பர் 2026: டிஎன்ஜிஎஃப் காஸ்மோ கோல்ஃப் மைதானத்தில், சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (சிபிசிஎல்) வழங்கும் ரூ. 1 கோடி மதிப்பிலான சென்னை ஓபன் 2026 போட்டியின் இரண்டாவது சுற்றின் முடிவில், அஜிதேஷ் சந்து ஆறு-அண்டர் 66 அடித்து இரண்டு ஷாட் முன்னிலை பெற்றுள்ளார்.

சண்டிகரைச் சேர்ந்த 37 வயதான இவர் (65-66), போட்டியின் தொடக்கத்தில் முன்னிலையைப் பகிர்ந்து கொண்டிருந்தார். பாதி ஆட்ட முடிவில், இரண்டு போகிகளுக்கு எதிராக எட்டு பேர்டிகளை அடித்து, 13-அண்டர் 131 என்ற ஸ்கோரை எட்டினார்.

டிபி வேர்ல்ட் பிஜிடிஐ-ல் ஐந்து முறை வென்றவரும், முன்னாள் ஆசிய டூர் சாம்பியனுமான சந்து, முந்தைய நாள் முன்னிலை வகித்த ஸ்டெபன் டானெக்கை விட இரண்டு ஷாட்கள் முன்னிலை பெற்றுள்ளார்.




29 வயதான செக் குடியரசைச் சேர்ந்த கோல்ஃப் வீரர் (65-68), நான்கு-அண்டர் 68 புள்ளிகளுடன் ஆறு பேர்டிகளையும் இரண்டு போகிகளையும் பதிவு செய்து, 11-அண்டர் 133 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு விகாராபாத்தில் நடந்த தெலங்கானா ஓபன் வெற்றியாளரான டெல்லியைச் சேர்ந்த ரஷீத் கான் (66-68), 10-அண்டர் 134 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அவரது நான்கு-அண்டர் 68 புள்ளிகளில், பார்-ஃபைவ் 18வது ஹோலில் ஒரு ஈகிள், நான்கு பேர்டிகள் மற்றும் இரண்டு போகிகள் அடங்கும்.

சந்து இரண்டு நைனன்களையும் மூன்று-அண்டரில் விளையாடினார், ஆனால் அன்றைய தினம் அவர் விளையாடிய இரண்டாவது நைனான முன் நைனை அவர் குறிப்பாக ரசித்தார், ஏனெனில் அதில் மைதானத்தின் மிகவும் சவாலான சில ஹோல்கள் உள்ளன.




## 'சிக்மா' திரைப்படத்தின் ப்ரீ-ரிலீஸ் நிகழ்வு!

சென்னை 10, செப்டம்பர் 2026: லைகா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் தயாரிப்பில் உருவாகியுள்ள 'சிக்மா'திரைப்படத்தின் மூலம், ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகிறார். சந்தீப் கிஷன், ஃபரியா அப்துல்லா உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்த திரைப்படம் அக்டோபர் இரண்டாம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. இந்த திரைப்படத்தின் ப்ரீ-ரிலீஸ் நிகழ்வு நடைபெற்றது.

ஹெட் ஆஃப் லைகா புரொடக்ஷன்ஸ் தமிழ் குமரன், "'சிக்மா' திரைப்படம் இயக்குநர் சஞ்சய்க்கு மட்டுமல்ல எங்கள் தயாரிப்பு நிறுவனத்திற்கும் மிக முக்கியமான படம். நாங்கள் தயாரித்த முதல் படம் 'கத்தி'. இப்போது ஜேசன் சஞ்சய் எங்கள் தயாரிப்பில் அறிமுகமாகிறார் என்பது பெருமையாக உள்ளது. சஞ்சய் மேக்கிங்கில் மிரட்டி இருக்கிறார். படம் நன்றாக வந்து இருக்கிறது. 'கோலமாவு கோகிலா' திரைப் படத்தில் இயக்குநர் நெல்சனையும், 'டான்' திரைப்படத்தில் சிபி சக்கரவர்த்தியும் அறிமுகப்படுத்தினோம். இன்று அவர்கள் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். 'சிக்மா' திரைப்படமும் ரூ. 100 கோடிக்கு மேல் வசூலிக்கும் என்று நம்புகிறோம். நிச்சயம் சஞ்சய் பெரிய உயரத்தை அடைவார். ஹீரோ சந்தீப் மற்றும் படக்குழுவினர் சிறப்பாக உழைத்து உள்ளனர். அண்ணன் சுபாஸ்கரன் சார்பாக அனைவருக்கும் வாழ்த்துக்கள்".

நடிகை ஃபரியா அப்துல்லா, "தயாரிப்பாளர்கள் சுபாஸ்கரன் சார், தமிழ்குமரன் சாருக்கு நன்றி. இந்த படம் எனக்கு ரொம்பவே ஸ்பெஷல். இயக்குநர் சஞ்சய்க்கு வாழ்த்துக்கள். ஃபிலிம் மேக்கிங், சினிமா மீது சஞ்சய்க்கு அதிக ஆர்வம் உண்டு. ரசிகர்கள் இந்தப் படத்திற்காக காத்திருக்கின்றனர். சந்தீப் கிஷனை இதற்கு முன்பு இப்படி ஒரு கதாபாத்திரத்தில் ரசிகர்கள் நிச்சயம் பார்த்திருக்க மாட்டார்கள். படம் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும்".

பாடலாசிரியர் சூப்பர் சுப்பு, "லைகா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் சார், தமிழ்குமரன் சாருக்கு நன்றி. இயக்குநர் சஞ்சய்க்கு இது தங்கமான வாய்ப்பு. அதை அவர் சரியாக பயன்படுத்தி இருக்கிறார். பொறுமையாக எடுத்து சொல்லி தனக்கு வேண்டிய வேலையை சஞ்சய் சரியாக வாங்கி விடுவார். அவருக்காகவே இந்த படம் பிளாக்பஸ்டர் ஹிட் ஆகும். இசையமைப்பாளர் தமன் சாருக்கும் நன்றி. சஞ்சய் இயக்கி விட்டார், அடுத்து அவர் நடிக்கவும் வர வேண்டும். வாழ்த்துக்கள் ப்ரோ".




நடிகர் சந்தீப் கிஷன், "இது போன்ற படம் மிக அரிதாகவே நடக்கும். இதற்கு முக்கிய காரணமாக இருந்த இயக்குநர் சஞ்சய்க்கு என் அன்பும் நன்றியும். அவருக்கென்று ஒரு அடையாளத்தை உருவாக்க வேண்டும் என்று கடுமையாக இந்த படத்தில் உழைத்திருக்கிறார். 'சிக்மா' மிக ஜாலியான ஜென்ஸீ திரைப்படம். உங்கள் முதல் படத்தை நான் நல்லபடியாக செய்வேன் என்று என்னை நம்பி வாய்ப்பு கொடுத்த சஞ்சய்க்கு நன்றி. நாம் நேசிக்கும் ஒரு விஷயத்தை பயமில்லாமல் செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். அது போல தான் 'சிக்மா' படத்திற்கும் நிச்சயம் வெற்றி கிடைக்கும். இந்த வெற்றிக்கு முதல் காரணம் சஞ்சய், இரண்டாவது காரணம் லைகா புரொடக்ஷன்ஸ். படக்குழுவினர் அனைவரும் சின்சியராக உழைத்து உள்ளனர். நிச்சயம் உங்களுக்கும் இந்த படம் பிடிக்கும்".

இயக்குநர் ஜேசன் சஞ்சய், "'சிக்மா' படத்தின் பிரமோஷன் பணிகளை சேலத்தில் இருந்து ஆரம்பிப்பது மகிழ்ச்சி. ஏனென்றால், 'சிக்மா' படத்திற்காக கிட்டத்தட்ட 10 நாட்கள் இங்கு படப்பிடிப்பு நடத்தினோம். அதனால், இங்கு நிறைய அழகான நினைவுகள் உண்டு. சுபாஸ்கரன் சார், தமிழ்குமரன் சார், சந்தீப், ஃபரியா மற்றும் எனது படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி. என் குடும்பத்தினருக்கும் நன்றி. நான் இயக்கிய முதல் படம் 'சிக்மா' அக்டோபர் 2 அன்று வெளியாகிறது. நம் எல்லோர் வாழ்விலும் ஒரு சிக்மா மொமண்ட் கண்டிப்பாக இருக்கும். அதாவது, கடினமான தருணங்களில் இருந்து மீண்டு வர நாம் எடுக்கும் ஒரு முடிவு நம் வாழ்க்கையை மாற்றும். அதுதான் 'சிக்மா' திரைப்படம். திரையரங்குகளுக்கு சென்று படம் பார்த்துவிட்டு உங்கள் ஆதரவு கொடுங்கள்" என்றார்.

## 14,399 கேள்விகள் எழுப்பிய சட்டமன்ற உறுப்பினர்கள்

சென்னை 10, செப்டம்பர் 2026: சட்டப் பேரவை கூட்டம் நேற்று நிறைவடையும் நேரத்தில் அனைவருக்கும் நன்றி தெரிவித்து சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் பேசியதாவது: பேரவை மொத்தம் 28 நாட்கள் நடை பெற்றது. இந்த அவை மொத்தம் 170 மணி 6 நிமிடங்கள் நடைபெற்றுள்ளது. நாள் ஒன்றுக்குச் சராசரி 6 மணி 4 நிமிடங்கள் நடந்துள்ளது. பட்ஜெட் பொது விவாதம் 4 நாட்கள் நடந்தது. இதில் 32 உறுப்பினர்கள் 14 மணி 15 நிமிடங்கள் பேசியுள்ளனர். 15 நாட்கள் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தில் 165 உறுப்பினர்கள், 63 மணி 53 நிமிடங்கள் பேசியுள்ளனர். அவையில் முன்மொழியப்பட்டவை 1,674, வினாக்கள் வரப்பெற்றவை 14,399, வினாக்களை அளித்த உறுப்பினர்கள் 170 பேர். அனுமதிக்கப்பட்ட வினாக்கள் 12,733. சிறப்பு கவன ஈர்ப்புகள் 45, அதில் 106 பேர் பேசினர். இதற்கான 6 மணி 47 நிமிடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கவன ஈர்ப்புகள் வரப்பெற்றவை 929, கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பட்டவை 153. அரசு தனித் தீர்மானங்கள்- 8, விதி 110 அறிக்கைகள் 18, 110 விதியின் கீழ் முதல்வர் அறிவிப்பு 17. ஆளுநர் உரை மீதான விவாதம் மொத்தம் 7 மணி 1 நிமிடம் நடைபெற்றது. திருத்தப்பட்ட பட்ஜெட் விவாதம் மொத்தம் 14 மணி 15 நிமிடங்கள் நடை பெற்றது. மானியக் கோரிக்கை விவாதத்தை பொறுத்த வரை மொத்தம் 63 மணி 53 நிமிடங்கள் நடைபெற்றுள்ளது. விவாதங்களில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 16 மணி 40 நிமிடங்களும், அதிமுக உறுப்பினர்கள் 17 மணி 25 நிமிடங்களும், இதர கட்சியினர் 19 மணி 43 நிமிடங்களும் பேசி யுள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.